# இரண்டாம் பருவத்தேர்வு -2024

## ஏழாம் வகுப்பு - தமிழ்

**காலம் : 2.00 மணி** **மதிப்பெண்கள் : 60**

I.

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6x1=6

1. மிளகாய் வற்றலின் _________ தும்மலை வரவழைக்கும்.

அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை

2. பொருந்தாத ஓசை உடைய சொல்__________

அ) பாய்கையால் ஆ) மேன்மையால் இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால்

3.. பெயர்ப்பகுபதம்_________வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

4. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம்_________

அ) கல்வி ஆ) காலமறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை

5. தொல்காப்பியம் கடற்பயணத்தை__________வழக்கம் என்று கூறுகிறது.

அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்

6. கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன________

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மாடங்கள்

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக. 2x1=2

7. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது _________

8. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது________

### இ) பொருத்துக 4x1=4

9. இயற்சொல் - பெற்றம்

10. திரிசொல் - இரத்தம்

11. திசைச்சொல் - அழுவம்

12. வடசொல் - சோறு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4x2=8

13. கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

14. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.

15. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

16. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

17. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?

18. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?

## III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2x2=4

19. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

20. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?

21. முதநிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

## IV. மனப்பாடப்பகுதி. 4+2=6

22. வானம்…………எனத்தொடங்கும் கலங்கரை விளக்கம்' பாடலை எழுதுக.

23. ' அறிவு'……… என முடியும் குறளை எழுதுக.

## V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2x3=6

24. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

25. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

26. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

## VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5x2=10

27. தொடர்களில் அமைத்து எழுதுக.

அ) நீரோட்டம் ஆ) தேர்ந்தெடுத்து

28. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.

அ) ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.

ஆ) நாங்கள் நேற்று கடற்கரைக்குச் செல்கிறோம்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

29. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.

அ) _______புல்லை மேயும்.

ஆ) ______பறக்கும்.

30. பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.

அ) தை________

ஆ) பா___________

31. இடைச்சொல் ' ஐ ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.

அ) பாடல் பாடினாள்.

ஆ) கடல் பார்த்தாள்.

32. . கலைச்சொல் அறிந்து எழுதுக.

அ) Artist- ______

ஆ) Brush_______

## VII. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1x7=7

33. . உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

34. ' ஆழ்கடலின் அடியில் ' கதையைச் சுருக்கி எழுதுக.

## VIII. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1x7=7

35. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு கட்டுரை எழுதுக.

**எங்கள் ஊர்**

( முன்னுரை- அமைவிடம்- பெயர்க்காரணம் – தொழில்கள்- சிறப்புமிகு இடங்கள்- திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை)

36. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு கட்டுரை எழுதுக.

பயணங்கள் பலவகை

(முன்னுரை – பயணத்தின் தேவை – தரைவழிப்பயணம் – கடல்வழிப் பயணம் – வான்வழிப் பயணம் - முடிவுரை)

www.Padasalai.Net